بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

# ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## பைத்துல் முக்கீத் பள்ளிவாசல், நியூசிலாந்து

**தமிழாக்கம் : மவ்லவி S. அப்துல் காதிர் சாஹிப்**

November 1
2013

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா அந்நூரின் 37 முதல் 39 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள்:**

فِيْ بُيُوْتٍ اَذِنَ اللّٰهُ اَنْ تُرْفَعَ وَيُذْكَرَ فِيْهَا اسْمُهٗ ۙ يُسَبِّحُ لَهٗ فِيْهَا بِالْغُدُوِّ وَالْاٰصَالِ ۙ۝

رِجَالٌ ۙ لَّا تُلْهِيْهِمْ تِجَارَةٌ وَّلَا بَيْعٌ عَنْ ذِكْرِ اللّٰهِ وَاِقَامِ الصَّلٰوةِ وَاِيْتَآءِ الزَّكٰوةِ ۙ
يَخَافُوْنَ يَوْمًا تَتَقَلَّبُ فِيْهِ الْقُلُوْبُ وَالْاَبْصَارُ ۙ۝

لِيَجْزِيَهُمُ اللّٰهُ اَحْسَنَ مَا عَمِلُوْا وَيَزِيْدَهُمْ مِّنْ فَضْلِهٖ ؕ وَاللّٰهُ يَرْزُقُ
مَنْ يَّشَآءُ بِغَيْرِ حِسَابٍ ۝

இந்த வசனங்களின் பொருள்: *எந்த வீடுகள் உயர்த்தப்பட வேண்டுமென்றும் அவற்றில் அவனது பெயர் நினைவு கூறப்பட வேண்டுமென்றும் இறைவன் கட்டளையிட்டுள்ளானோ அந்த வீடுகளில் அவனது தூய்மை காலை நேரங்களிலும் மாலை வேளைகளிலும் எடுத்துரைக்கப் -படுகின்றது.*

*இவ்வாறு (நினைவு கூறும்) ஆண்களைக் கொடுக்கல் வாங்கல் தொடர்புகளோ வணிகத் தொழிலோ அல்லாஹ்வை நினைவு கூறுவதிலிருந்தும் ஸகாத்து கொடுப்பதிலிருந்தும் கவனமற்றவர்களாக்குவதில்லை. உள்ளங்களும் கண்களும் கலங்கும் ஒரு நாளைக் குறித்து அவர்கள் அஞ்சுகின்றனர்.*

*இதன் பயனாக அல்லாஹ் அவர்களுக்கு அவர்களின் செயல்களுக்குரிய மிகச் சிறந்த கூலி வழங்கி தன் அருளால் அவர்களுககு மிகுதியாக வழங்குவான். மேலும் அல்லாஹ் தான் நாடியவருக்கு அளவின்றி வழங்குகின்றான். (24:37-39)*

இன்று அல்லாஹ், ஜமாஅத்தே அஹ்மதிய்யா நியூசிலாந்திற்கு முறைப்படி தம் பள்ளிவாசலைக் கட்டுவதற்கான நல்வாய்ப்பை வழங்கியுள்ளான். அல்லாஹ் இந்த பள்ளிவாசலை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக! நியூசிலாந்து ஜமாஅத் சிறிய ஜமாஅத் ஆகும். சிறியவர்கள், பெரியவர்கள் அனைவரையும் சேர்த்து மொத்தம் 400 பேர் உள்ளனர். ஆனால் அல்லாஹ்வின் அருளால் பள்ளிவாசலை மிகவும் அழகாகக் கட்டியுள்ளார்கள். இப்போதுள்ள ஜமாஅத் உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட அதிகம் பேர் தொழும் இடவசதி உள்ளது. இதன் கொள்ளளவை விட விரைவாக இதில் அதிக எண்ணிக்கையில் மக்கள் வந்து இந்த இடம் சிறிதாகி விடட்டுமாக!

வேலை செய்பவர்கள் பலர் இரவு பகலாக மிகவும் கடின உழைப்புடன் வேலை செய்துள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் பலர் இரவு பகல் பாராமல் மன நிறைவுடனும் அக்கறையுடனும் இதில் வேலை செய்துள்ளார்கள் என்று எனக்கு கூறப்பட்டுள்ளது. நமது வழக்கத்திற்கேற்ப சுயமாக வேலை செய்து செலவையும் மிச்சப்படுத்தியுள்ளார்கள். இந்த பள்ளிவாசலில் ஹால் மற்றும் பிற இடங்களைச் சேர்த்து மொத்தம் மூன்றரை மில்லியன் டாலர்

செலவாகியுள்ளது. இதில் 3.1 மில்லியன் டாலர் பள்ளிவாசலுக்கும் மீதம் சமையலறை மற்றும் பிற வேலைப்பாடு -களுக்காகவும் செலவாகியுள்ளது. ஜமாஅத்தின் எண்ணிக்கை குறைவாக உள்ள காரணத்தால் உடனடியாக இவ்வளவு பெரிய தொகையை வசூலிக்க முடியவில்லை அல்லது வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை. எனவே கடன் வாங்க வேண்டியது வந்தது.

ஆனால் இந்த கடனை ஜமாஅத் உறுப்பினர்கள் விரைவாக செலுத்தி விடுவார்கள் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் ஜமாஅத் இங்கு நிலைபெற்று இந்த வருடத்துடன் 25 ஆண்டுகள் நிறைவடைகின்றன. எனவே எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும் குறைந்தபட்சம் ஒரு பள்ளிவாசலை அல்லாஹ்வின் சந்நிதானத்தில் அர்ப்பணிக்க வேண்டும் என்று ஜமாஅத் பெரிதும் விரும்பியது. இந்த விருப்பம் நிச்சயமாக இருக்கவும் வேண்டும். இந்த அன்பளிப்பை அல்லாஹ்வின் வீடு கட்டுவதன் வடிவில் அர்ப்பணிக்க வேண்டும்.

ஆகவே இந்த உணர்வுகளுடன் நீங்கள் அல்லாஹ்வின் சந்நிதானத்தில் இந்த அன்பளிப்பை அர்ப்பணித்துள்ளீர்கள். எனவே இது கடனாக இருக்கக் கூடாது. முடிந்தவரை விரைவாக இந்த கடனைச் செலுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதனால் இறைவனின் முன்னிலையில் தூய்மையான தியாகம் செய்யக் கூடியவர்களாக நீங்கள் ஆக வேண்டும்.

ஜமாஅத் உறுப்பினர்களாகிய உங்கள் மீது நல்லெண்ணம் கொண்டவாறு ஜமாஅத் இந்த கடனை வாங்கியுள்ளது. ஜமாஅத் சகோதரர்கள் தமது தியாகங்களின் மூலம் இந்த பள்ளிவாசலைக் கட்ட வேண்டும். இந்த தியாகம் சற்று தாமதமாக நடந்தாலும் பரவாயில்லை. இதன் மூலம் நீங்கள் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறக் கூடியவர்களாக ஆக வேண்டும். எவர் இவ்வுலகில் இறைவனுக்காக ஒரு வீடு கட்டுவாரோ அல்லாஹ் சொர்க்கத்தில் அவருக்காக வீடு கட்டுவான் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இறைவனின் சொர்க்கத்தை விரும்பாதவர் எவர்? தனக்காக சொர்க்கத்தில் வீடு ஒன்றை விரும்பாதவர் எவராக இருக்க முடியும்? நிச்சயமாக எந்தவொரு அஹ்மதியும் அவர், தாம் இறைவனின் விருப்பத்தைப் பெறாமல் இருக்க வேண்டும் என்று ஒருபோதும் எண்ணிக்கூட பார்க்க முடியாது. சொர்க்கத்தில் இறைவன் தரக்கூடிய வீட்டைப் பெறுவதற்கு விருப்பமில்லாமல் இருக்க முடியாது.

ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் இந்த அழகு உலகில் எல்லா இடங்களிலும் காணப்படுகிறது. ஜமாஅத் உறுப்பினர்கள் பொருள் தியாகத்தில் ஒருவரையொருவர் முந்திக் கொண்டு பங்கெடுப்பவர்களாவர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகின் மூலை முடுக்கு வரை கொண்டு சேர்ப்பதற்காக இக்காலத்தில் தமது சஹாபாக்களிடம் பொருள் தியாகம் பற்றி ஏற்படுத்திய விழிப்புணர்வு, மேலும் தமது சஹாபாக்கள் செய்த தியாகத்தைப் பார்த்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள், எல்லையற்ற பரிசுத்தத் தன்மை உள்ளது; அன்பு வியக்க வைக்கும் அளவில் உள்ளது என்று கூறினார்கள். இந்த நிலை இன்று நூறு ஆண்டுகள் கடந்த பிறகும் ஜமாஅத்தில் நிலைபெற்றுள்ளது.

விசுவாசம் மற்றும் தூய்மையில் அஹ்மதிகள் எல்லாரும் மிகவும் மேலோங்கியுள்ளார்கள். நியூசிலாந்தின் ஜமாஅத்தில் தற்போதுள்ள எண்ணிக்கையில் 60% ற்கும் மேல் ஃபிஜியிலிருந்து இங்கு வந்த மக்கள் ஆவர். ஏறக்குறைய 23% பாகிஸ்தானிலிருந்து வந்த முஹாஜிர்கள் ஆவர். மீதமுள்ளவர்கள் பிற சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். இந்த ஜமாஅத் சிறியது என்றாலும் இங்கு பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளனர். விசுவாசத்திலும், தூய்மையிலும் ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் முந்த முயற்சி செய்கின்றனர்.

ஆனால் வெளிப்படையான பரிசுத்தத் தன்மை மற்றும் தியாகங்கள் அது நேரத்தை தியாகம் செய்வதாயினும் அல்லது செல்வத்தை தியாகம் செய்வதாயினும் இவை ஒரு உண்மையான மூஃமினுக்குப் போதுமானதல்ல. மாறாக நிரந்தர மனப்பான்மையுடன் நன்மையில் முன்னேறிச் செல்வதும் இறையச்சத்தின் படி வழிநடப்பதும், பிறப்பின் நோக்கத்தை எப்போதும் நினைவில் கொள்வதும் ஆகிய இதுவே ஓர் உண்மையான மூஃமினின் சிறப்பம்சமாகும். இதுவே சிறப்பாக இருக்கவும் வேண்டும்.

பிறப்பின் நோக்கத்தைப் பற்றி இறைவன் நமக்கு கவனமூட்டியுள்ளான். அதை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நமக்கு நினைவூட்டியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

பல வகையான இயல்பைக் கொண்ட மனிதர்கள் புரிந்து கொள்ளும் திறன் இல்லாததன் காரணமாகவும், தைரியமின்மையின் காரணமாகவும் தம் வாழ்விற்கு பல்வேறு குறிக்கோள்களை ஏற்படுத்திக் கொள்கின்றனர். உலக

குறிக்கோள்கள் மற்றும் விருப்பங்களை அடைந்ததும் அத்துடன் நின்று விடுகின்றனர். ஆனால் இறைவன் தன் தூய வேதத்தில் பிறவியின் நோக்கத்தை وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ அதாவது ***ஜின்களையும் மனிதர்களையும் என்னை அறிந்து கொள்வதற்கும் என்னை வணங்குவதற்கும் நான் படைத்துள்ளேன் (51:57)*** என்று கூறுகின்றான். எனவே இந்த வசனத்தின்படி மனித வாழ்வின் உண்மையான குறிக்கோள், இறைவனை வணங்குவதும் இறைவனை அறிந்து கொள்வதும் இறைவனுக்காகவே ஆகிவிடுவதும் ஆகும்.

எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்து தற்காலிக உணர்ச்சிப்பெருக்கு அல்லது ஆர்வத்தின் அடிப்படையில் சில தியாகங்களைச் செய்வது நமது நோக்கமாகாது. மாறாக நிரந்தர மனப்பான்மையுடன் இறைவனை வணங்குவது நமது நோக்கமாகும். இறை வணக்கத்தின் தரம், இறைவனை அறிந்து கொள்வதன் மூலமே கிடைக்க முடியும். இறைவன் எல்லா சக்திகளும் உடையவன் ஆவான். எனது ஒவ்வொரு சொல்லையும் செயலையும் பார்த்துக் கொண்டிருக்கிறான். வெளிப்படையான எனது செயல்களை மட்டும் அவன் பார்ப்பதில்லை. மாறாக உள்ளத்தின் ஆழம் வரை அவனது பார்வை உள்ளது. நான் இன்னும் வெளியிடாத எனது எண்ணங்களையும் அவன் பார்க்கிறான் என்று நம்ப வேண்டும். இந்த நிலை ஏற்பட்டால் இறைவனுக்காக தன்னை அர்ப்பணிக்க இவர் முயற்சி செய்கிறார் என்று நாம் கூற முடியும்.

அதாவது எந்தவொரு செயலையும் உலக விருப்பங்களை மட்டும் நிறைவேற்றுவதற்காக செய்யக் கூடாது. மாறாக ஒவ்வொரு முயற்சியும் ஒவ்வொரு நற்செயலும் இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்காகச் செய்ய வேண்டும். நமக்கு இறைவனின் உதவி தேவைப்படும் போது மட்டும் அல்லது நாம் ஏதாவது பிரச்சனையில் அகப்பட்டுக் கொள்ளும் போது மட்டும் இறைவனை வணங்குவது அல்லது நமது உலகத் தேவைகள் நிறைவேறவில்லை என்றால் அப்போது இறைவனை வணங்குவது என்று இல்லாமல் நமது இறை வணக்கங்களை, செல்வமும் வசதியும் இருக்கும் போதும் செய்ய வேண்டும். உலக விவகாரங்கள், உலக வியாபாரங்கள் நம்மை இறைவனை வணங்குவதிலிருந்து கவனமற்றவர்களாக ஆக்கிவிடக் கூடாது.

இந்த பள்ளிவாசல் வெறும் கட்டடம் என்று மட்டுமில்லாமல், உங்களுக்கு இந்த பள்ளிவாசலின் விரிவாக்கமும் அதன் அழகும் நாம் இதை கட்டுவதற்காக இவ்வளவு நேரத்தை செலவிட்டுள்ளோம்; இத்தனை வகாரே அமல் பணிகளை நாம் செய்தோம்; இத்தனை தொகையை நாம் மிச்சப்படுத்தியுள்ளோம்; இத்தனை மணி நேரம் வகாரே அமல் செய்தோம்; இதைக் கட்டுவதற்காக நாம் இத்தனை சந்தா கொடுத்துள்ளோம் என்பதை மட்டும் நினைவூட்டுவதாக இல்லாமல் இவ்வுலகில் பள்ளிவாசலைக் கட்டுவது மறுமையில் இறைவன் சொர்க்கத்தில் வீடு கட்டித் தரும் அந்த அருட்கொடையை நினைவூட்டுவதற்காக அமைய வேண்டும்.

இறைவனின் இந்த இல்லத்தை கட்டிய பின் அதற்குரிய கடமைகளை நிறைவேற்றும் போதுதான் மறுமையின் வீடு கிடைக்கும். நான் ஓதிய இறை வசனத்தில் அல்லாஹ் கூறியுள்ள கட்டளைகளின்படி செயல்படுவது தான் பள்ளிவாசலின் கடமையை நிறைவேற்றுவதாகும்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

لَا تُلْهِيهِمْ تِجَارَةٌ وَلَا بَيْعٌ *அவர்களின் வியாபாரங்களும், கொடுக்கல் வாங்கல்களும் அவர்களை கவனமற்றவர்களாக ஆக்குவதில்லை. அவர்களே இறைவனின் உண்மையான மூஃமின்களாவர்.*

எதிலிருந்து கவனமற்றவர்களாக ஆக்குவதில்லை? அல்லாஹ் கூறுகின்றான்: عَنْ ذِكْرِ اللَّهِ *அல்லாஹ்வை நினைவு கூர்வதிலிருந்தும் தொழுகைகளை நிறைவேற்றுவதிலிருந்தும் ஸகாத் செலுத்துவதில் இருந்தும் அவர்களை கவனமற்றவர்களாக ஆக்குவதில்லை.*

ஆகவே, அஹ்மதிகளாகிய நாம் இந்த சிறப்புப் பண்புகளைக் கொண்ட உண்மையான மூஃமின்களாகத் திகழ வேண்டும். இங்கு தொழுகைக்குரிய சென்டர் முன்பும் இருந்தது. ஆனால் சென்டர் மற்றும் பள்ளிவாசல் ஆகிய இரண்டுக்கும் ஒரு வெளிப்படையான வேறுபாடும் உள்ளது. சென்டர் என்பது ஒரு ஹால் மட்டுமே ஆகும். ஆனால் பள்ளிவாசலில் குவி மாடம் (Doom), மினாரா போன்றவை உள்ளன. பள்ளிவாசல் என்ற பெயரிலேயே புனிதத்தன்மை தனியாக வெளிப்படுகிறது.

இங்கு முறைப்படி ஒரு பள்ளிவாசலைக் கட்டுங்கள் என்று எனது முதல் சுற்றுப் பயணத்தில் நான் உங்களுக்கு கூறினேன். அதன் ஒரு நோக்கம் பள்ளிவாசலின் குவி மாடம் (Doom) மற்றும் அதன் மினாரா நாம் செல்வத்தையும் நேரத்தையும் தியாகம் செய்த பின் கட்டியுள்ள பள்ளிவாசலின் உரிமைகளையும் செலுத்த வேண்டும் என்று உங்களுக்கு

நினைவூட்டிக் கொண்டே இருக்க வேண்டும். இரண்டாவது, பள்ளிவாசலின் குவிமாடமும் அதன் மினாராவும் சுற்றுப்புறத்தில் உள்ளவர்களின் கவனத்தையும் ஈர்க்கிறது. இதனால் தப்லீகிற்குரிய வழிகளும் திறக்கும். மக்களின் கவனம் இதன்பால் திரும்பும். இஸ்லாத்தின் உண்மையான வடிவத்தைப் பார்க்க வேண்டும் என்ற தேட்டத்தில் மக்கள் இங்கே வருவார்கள். இந்த மக்கள் எப்படிப்பட்டவர்கள், எப்படிப்பட்ட முஸ்லிம்கள் என்று ஆராயும் ஆர்வத்தில் வருவார்கள்.

அல்லாஹ்வின் அருளால் பள்ளிவாசலைக் கட்டியதுடன் ஜமாஅத்தே அஹ்மதிய்யா முஸ்லிமாவின் அறிமுகம் பன்மடங்காக உயர்வதை நான் இதுவரை பார்த்துள்ளேன். இந்த அறிமுகத்தின் காரணமாக இந்த பள்ளிவாசலின் உரிமைகளைச் செலுத்துவதன்பால் கவனமும் ஏற்படுகிறது. இங்கு வசிக்கக்கூடியவர்கள் இந்த பள்ளிவாசலின் உரிமைகளை நிறைவேற்றக்கூடிய மக்கள் ஆவார்கள். ஜமாஅத்தின் உறுப்பினர்களுக்கு இதன் பால் கவனம் ஏற்படுகிறது; ஏற்படவும் வேண்டும். நாமே இதற்குரிய உரிமையை நிறைவேற்ற வேண்டும்.

பள்ளிவாசலுக்குரிய உரிமை என்ன? முதல் உரிமை, உங்களது வியாபாரங்கள், கொடுக்கல் வாங்கல்கள், இந்த உலக வேலைப்பாடுகள் உங்களை இறைவனை நினைவு கூறுவதை விட்டு விலக்குபவையாக இருக்கக் கூடாது. மாறாக தொழுகைகள் மற்றும் இறை தியானம் ஆகியவற்றின் பால் உங்களது வியாபாரமும் கூட கவனமூட்டுபவையாக இருக்க வேண்டும்.

'ஹய்ய அலஸ் ஸலா' மக்களே! தொழுகையின் பால் வாருங்கள் என்ற ஓசை வந்து விட்டால் வியாபாரங்களை மறந்து விடுங்கள்; எல்லா தொழிலையும் மறந்து விடுங்கள்; பள்ளிவாசலின் பக்கம் விரைந்து ஓடுங்கள்.

இக்காலத்தில், நாங்கள் வெகு தூரத்தில் இருக்கிறோம். பாங்கும் பள்ளிவாசலுக்குள் கொடுக்கப்படுகிறது. ஓசை கேட்பதில்லை என்று யாரும் சொல்லலாம். இப்போது கொடுத்த பாங்கும் மிகவும் மெல்லிய குரலில் தான் கொடுக்கப்பட்டது. இதன் ஓசையை ஹாலில் கேட்பது கூட சிரமமாகும். இதற்கு என்ன செய்வது? என்று சொன்னால், நீங்கள் பள்ளிவாசல் கட்டியுள்ளீர்கள். இனி அதில் இறைவணக்கத்தின் கடமையை நிறைவேற்ற வேண்டும் என்ற உணர்வு உங்களிடம் எப்போதும் இருக்க வேண்டும். அதன் மூலம் உங்களது பிறப்பின் நோக்கத்தை நீங்கள் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

இரண்டாவது, நான் முன்னரும் பலமுறை கூறியுள்ளேன். இன்றைய நாட்களில் எல்லாரும் கைபேசியை தம் பாக்கெட்டில் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை சிறந்த முறையில் பயன்படுத்துங்கள். பாங்கு சொல்லும் நேரத்தில் பாங்கு சப்தத்தில் அலாரம் அடிக்கட்டும். பக்கத்தில் உள்ளவர்கள் பள்ளிவாசலுக்கு வர வேண்டும். தொலைவில் உள்ளவர்கள் தொழுகையின் பக்கம் கவனம் செலுத்துங்கள். நீங்கள் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் இடங்களில் தொழுகைகளின் பக்கம் கவனம் வைத்தவாறு தொழுது வந்தால், அக்கம் பக்கத்தினருக்கு கவனம் ஏற்படும். நீங்கள் யார்? என்று கவனிப்பார்கள். பிறகு பள்ளிவாசலின் கட்டடம் அதற்குரிய வழியாக அமைந்து விடும். நீங்கள் உங்கள் நண்பர்களுக்கு பள்ளிவாசலுக்கு வருமாறு அழைப்பு விடுப்பீர்கள். இவ்வாறு அல்லாஹ்வைக் குறித்து பேசப்படும். மேலும் அல்லாஹ்வின் தூதுச் செய்தியை அந்நியர்களுக்கு எட்ட வைக்கும் தொடரும் ஆரம்பமாகி விடும். இவ்வாறு நன்மைகளின் இந்தத் தொடர் அல்லாஹ்வின் நெருக்கத்தை வழங்கக்கூடியதாக அமையும்.

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் இந்த மாற்றத்தையும் தம் சஹாபாக்களிடம் ஏற்படுத்தினார்கள். அதற்கான உதாரணத்தை அல்லாஹ் இவ்வசனங்களில் வழங்கியுள்ளான். அந்த சஹாபாக்கள் கோடிக்கணக்கில் வியாபாரமும் செய்தார்கள். ஆனால் அல்லாஹ்வை நினைவு கூறுவதைக் கொண்டு உள்ளங்கள் நிரம்பியிருந்தன. தொழுகைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் இருந்து வந்தது. இந்தப் புரட்சியை ஏற்படுத்த இக்காலகட்டத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை அடியாரை அனுப்பினான். உங்களது தொடர்பை அல்லாஹ்வுடன் உறுதிப்படுத்துங்கள். உங்கள் தொழுகைகளை பாதுகாத்து வாருங்கள். உங்களது செல்வங்களைப் பரிசுத்தமாக்குவதற்காக பொருள் தியாகம் செய்யுங்கள்.

நான் அடிக்கடி கூறி வருகிறேன். ஜமாஅத்தின் வரலாறும் நமக்கு இதை தெரிவிக்கிறது. ஜமாஅத் உறுப்பினர்களின் செயல்பாடுகளும் நமக்கு இதை தெரிவிக்கின்றன. அதாவது பொருள் தியாகம் செய்வதில் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் மிகவும் முன்னேறியுள்ளது; முன்னேறிக் கொண்டிருக்கிறது. இதன் பக்கம் கவனமும் இருந்து வருகிறது. ஆனால் தொழுகைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்துவது மிகவும் அவசியமாகும். இபாதத்தின் தரத்தை அடைவதற்கு இன்னும் அதிக தேவை உள்ளது. ஆகவே இதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். பள்ளிவாசலை நிரப்புங்கள். ஜமாஅத்தாக தொழும் போது தான் தொழுகைகள் முறைப்படி நிலைநாட்டப்படும். பள்ளிவாசல் கட்டுவதன் நோக்கமும் இதுவே ஆகும். இங்கு ஜமாஅத்தாக தொழுகை நடத்தப்பட வேண்டும்.

அல்லாஹ் உண்மையான மூஃமின்களுக்கு இவ்வுலகத்தை விட மறுமையைப் பற்றியே அதிக கவலை இருக்கும் என்று கூறுகிறான். மனிதன் முதிய வயதை அடையும் போது அதிக கவலை இருக்கும். அப்போது அழுது துஆ செய்கிறார். சிலர் முடிவு நன்மையாக அமைய துஆ செய்யுங்கள் என்று கூறுகின்றனர். அல்லாஹ் கூறுகிறான்: உண்மையான மூஃமின்களுக்கு இந்த நிலை இறுதி வயதை அடையும் போது ஏற்படுவதில்லை. மாறாக அல்லாஹ்வின் பக்கமும், இறை வணக்கத்தின் பக்கமும் கவனம் செலுத்துவது மற்றும் தமது உள்ளத்தை தூய்மைப்படுத்துவதற்காக முயற்சி ஆகியவற்றை அவர்கள் இளைய வயதிலும் வசதிகள் இருக்கும் போதும் செய்வது வருவார்கள். இளமையிலும் வசதிகள் இருக்கும் போதும் அவர்களுக்கு இறைவன் நினைவிருக்கிறான். அவர்கள் காலையிலும் மாலையிலும் இறைவனை நினைவு கூறுகிறார்கள். காரணம், அவர்களுக்கு எல்லா நேரமும் மறுமையின் அச்சம் கண்முன் இருக்கும். அவர்களது உள்ளங்கள் நடுங்குகின்றன. நான் கூறியது போன்று, இது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் சஹாபாக்களின் நிலையின் வரைபடமாகும். இந்த நிலையைத் தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் ஏற்படுத்த வந்தார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

உள்ளம் கவலையால் நிரம்பியிருக்கிறது. அல்லாஹ் நமது ஜமாஅத்திற்கும் சஹாபாக்களுக்கு வழங்கிய அருட்கொடைகளை வழங்குவானாக! சஹாபாக்களிடம் இருந்த சத்தியமும் தூய்மையும் விசுவாசமும் இவர்களிடமும் ஏற்பட வேண்டும். இறைவனைத் தவிர இவர்கள் வேறு யாருக்கும் அஞ்சுபவர்களாக இருக்கக் கூடாது. இறையச்சம் உடையவர்களாக இருக்க வேண்டும். ஏனென்றால் இறைவனின் நேசம் இறையச்சம் உடையவர்களுடன் தான் இருக்கிறது.

*(2.195)* أَنَّ اللّٰهَ مَعَ الْمُتَّقِيْنَ அல்லாஹ்வின் அருட்கொடையைப் பெற வேண்டுமென்றால் அல்லாஹ்வின் கட்டளையால் உயர்த்தப்படுகின்ற வீடுகளில் நமது வீட்டையும் சேர்க்க வேண்டும் என்றால் அல்லாஹ்வின் திக்ரைக் கொண்டு வீடுகளையும் நிரப்ப வேண்டும். மேலும் எல்லா நேரமும் இறையச்சத்தை நமது உள்ளத்தில் அமர்த்துவது அவசியமாகும். உலகத்தின் எல்லா அச்சங்களும், வியாபாரங்களைக் குறித்த அச்சங்கள் ஆகிய அனைத்தும் இறையச்சத்திற்கு எதிரில் எந்த மதிப்புமற்றவையாகி விட வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் தமது ஜமாஅத்திற்கு இறையச்சத்தை உருவாக்குங்கள்; இறைவனை எல்லாவற்றையும் விட முதன்மையாக்கிக் கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார்கள். இந்த சொற்கள் எனது சொற்களாகும். ஆனால் அதன் கருத்து இதுதான். அதாவது உலகத்திற்குப் பின்னால் செல்வதால் சிறிது காலத்திற்கு தற்காலிகமான உலகப் பலன்கள் உங்களுக்கு கிடைக்கலாம். அதிலும் எப்போதும் நிம்மதி இருப்பதில்லை. இப்படி ஆகிவிடக் கூடாதே! அப்படி ஆகிவிடக் கூடாதே! என்ற பதற்றம் இருக்கும். ஆனால் இறைவனை தேடினால் அவனுக்காக ஆகிவிட்டால் இறைவனும் கிடைத்து விடுவான்; உலகமும் கிடைத்து விடும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள், நான் ஏற்கனவே கூறியது போன்று, கோடிக்கணக்கில் வியாபாரம் செய்தார்கள். ஆனால் அவர்கள் தமது இறைவணக்கத்தை ஒருபோதும் மறக்கவில்லை. அவர்கள் ஒருபோதும் இறைவனை நினைவு கூறுவதை மறக்கவில்லை. அல்லாஹ்வின் அச்சம் அவர்களுக்கு ஒருபோதும் மறக்கவில்லை. எனவே நாம் இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்து நம்மில் தூய மாற்றத்தை ஏற்படுத்துவதை வெளிப்படுத்துகிறோம். இந்த மாற்றங்கள் உண்மையான மாற்றங்களாக இருந்தால் தான் பலன் தருபவையாகும். இவை நமது வாய்ப்பேச்சுகளாக மட்டும் இருந்து விடக் கூடாது. வெறுமனே நாவினால் ஒப்புக் கொண்டதாக இருக்கக் கூடாது.

இந்த தூய்மையான மாற்றங்களை நீங்கள் உண்மையிலேயே மேற்கொண்டால், நீங்கள் இறையச்சத்தின் வழி நடப்பவர்களானால், உங்களது தொழுகைகளும் குறித்த நேரத்தில் நிறைவேற்றப்பட்டால், அவை இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்காக இருந்தால், உங்களது பிற செயல்களும் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக இருந்தால் நீங்கள் அல்லாஹ்விடம் நற்கூலி பெறுபவர்களாவீர்கள். உங்களுக்கு உலக ரிஸ்கும் கிடைக்கும். ஆன்மீக ரிஸ்கும் கிடைக்கும் என்று அல்லாஹ் கூறுகிறான்.

உலகப் பணிகளைச் செய்ய வேண்டாம் என்று அல்லாஹ் கூறவில்லை. மாறாக நீங்கள் இறைவனை நினைவு கூறுவதை மறக்கக் கூடாது என்றே கூறுகிறான். நீங்கள் உங்கள் உலக வியாபாரங்களின் காரணமாக தொழுகைகளையும் வீணாக்கி விடாதீர்கள். உங்கள் பிறப்பின் நோக்கத்தை மறந்து விடாதீர்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

நீங்கள் தொழுகைகளை மறந்து உலகில் மூழ்கினால் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் என்ன வித்தியாசம் உள்ளது? நீங்கள் பைஅத் செய்து என்று பயன்? இந்த வித்தியாசத்தை தெளிவாக வேறுபடுத்திக் காட்டுவது நமது பொறுப்பாகும். நாம் நம்மை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்தில் இணைந்தவர்கள் என்று எண்ணுகிறோம் என்றால் இந்த வேறுபாட்டை எடுத்துக் காட்டுவது அவசியமாகும். நமது ஒவ்வொரு செயலையும் சொல்லையும் இறைவனின் விருப்பத்திற்கேற்ப அமைத்துக் கொண்டால் தான் இந்த வேறுபாடு நிலைபெறும். நமது உள்ளத்தில் அல்லாஹ்வின் அச்சம் இருக்க வேண்டும். உலகத்தை விட அதிகமாக மறுமையின் பக்கம் நாம் பார்க்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்தக் கருத்தை மிகத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்கள். **அவர்கள் கூறுகின்றார்கள்:**

لَا تُلْهِيهِمْ تِجَارَةٌ وَلَا بَيْعٌ عَنْ ذِكْرِ اللّٰهِ

என்று இறைவன் கூறிய இந்த நபர்கள் தான் இறைவனின் முழுமையான நல்லடியார்கள் ஆவர். உள்ளம் இறைவனுடன் உண்மையான தொடர்பும் அன்பும் உருவாக்கி விட்டால் அவனிடமிருந்து அது பிரிவதே இல்லை. இதன் நிலையை இவ்வாறு புரிந்து கொள்ளலாம். உதாரணமாக, ஒருவருடைய குழந்தை உடல்நலம் சரியில்லாமல் இருக்கும் போது அந்த மனிதர் எங்கு சென்றாலும், எந்த வேலையில் ஈடுபட்டிருந்தாலும் அவருடைய உள்ளமும் கவனமும் அக்குழந்தையையே நினைத்துக் கொண்டிருக்கும். அவ்வாறே இறைவனுடன் உண்மையான தொடர்பும் அன்பும் உருவாக்குகின்றவர்கள் எந்த நிலையிலும் இறைவனை மறப்பதே இல்லை.

**பிறிதோரிடத்தில் அவர்கள் கூறுகின்றார்கள்:** மார்க்கமும் உலகமும் ஓரிடத்தில் ஒன்றுசேர முடியாது.

இது மிகவும் சரியான கருத்தாகும்.

பிறகு கூறுகின்றார்கள்: விவசாயி விவசாயத்தையும், வியாபாரி வியாபாரத்தையும், வேலை பார்ப்பவர் வேலையையும், சுய தொழில் செய்பவர் தொழிலையும் கைவிட்டு விட்டு கை கால்களை முடக்கி வேலை ஏதும் செய்யாமல் உட்கார்ந்து கொள்ளட்டும் என்று நாம் கூறவில்லை. மாறாக لَا تُلْهِيهِمْ تِجَارَةٌ وَلَا بَيْعٌ عَنْ ذِكْرِ اللّٰهِ என்ற நிலை இருக்க வேண்டும். கைகள் வேலை செய்து கொண்டிருக்க வேணடும். உள்ளம் இறைவனை நினைதது‌க் கொண்டிருக்க வேண்டும். வியாபாரி தன் வியாபாரத்தில், விவசாயி தன் விவசாயப் பணிகளில், அரசன் தன் அரியணையில் உட்கார்ந்து கொண்டு இவ்வாறு யாருக்கு என்ன வேலை இருந்தாலும் இறைவனையே தம் நோக்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். மேலும் அவனது மகத்துவம் மற்றும் வல்லமையைக் கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும். அவனது கட்டளைகள் மற்றும் தடுத்தவைகள் ஆகியவற்றைப் பேணியவாறு இருந்து என்ன வேண்டுமானாலும் செய்ய வேண்டும். அல்லாஹ்வின் கட்டளையில் இதை செய்ய வேண்டும் என்று இறைவன் இட்ட கட்டளையைச் செய்ய வேண்டும். மேலும் இதை செய்யக்கூடாது என்று இறைவன் தடுத்துள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு அல்லாஹ்வின் கட்டளையைக் கண்முன் நிறுத்தி செயல்பட்டால், உங்களுக்கு ஒரு செயல்திட்டம் முன்னால் இருக்கும். அதன்படி மனிதன் ஒரு வரையறைக்குள் செயல்படுவான்.

நீங்கள் விரும்புவதைச் செய்யுங்கள் என்பதன் பொருள், உங்களுக்கென்று தனியாக எந்த வழியும் இருக்காது. அல்லாஹ் கூறியுள்ள கட்டளையை மட்டும் செய்வீர்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ்வுக்கு அஞ்சி எதை வேண்டுமானாலும் செய்! நீங்கள் வியாபாரம் மற்றும் தொழிலை விட்டு விட்டு நொண்டி அல்லது முடவனைப் போன்று பயனின்றி உட்கார்ந்திருங்கள் என்ற இஸ்லாம் எங்கே போதிக்கிறது? பிறருக்கு தொண்டு செய்வதற்குப் பதிலாக நீங்களே பிறருக்கு சுமையாக இருங்கள் என்று இஸ்லாம் கூறவில்லை. (இறை தியானமும் இருக்க வேண்டும். அதே சமயம் வேலையையும் செய்து வர வேண்டும்.)

அவர்கள் கூறுகின்றார்கள்: அவ்வாறு இல்லை. இப்படி சோம்பேறியாக இருக்கும் மனிதர் இறைவன் மற்றும் அவனுடைய மார்க்கத்திற்கு என்ன தொண்டு செய்ய முடியும்? அவரிடம் அல்லாஹ் ஒப்படைத்துள்ள அவரது மனைவி மக்களுக்கு அவர் எப்படி உணவளிப்பார்? ஆகவே நீங்கள் உலகத்தை முற்றிலும் துறந்து விடுங்கள் என்பது இறைவனது விருப்பமல்ல. மாறாக அவனது நோக்கம் *கத்அஃப்லஹ மன்ஸக்காஹா* என்பதாகும். வியாபாரம் செய்யுங்கள்; தொழில் செய்யுங்கள்; வாணிபம் செய்யுங்கள். எதை வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால்

உள்ளத்தை இறைவனுக்கு கீழ்படியாமல் இருப்பதிலிருந்து தடுத்துக் கொண்டே இருங்கள். தமது உள்ளத்தை தூய்மையாக வைத்திருப்பவர்களே வெற்றி பெறுகின்றனர். உங்களுடைய இந்த விவகாரங்கள் இறைவனிடமிருந்து உங்களை கவனமற்றவர்களாக ஆக்கி விட வேண்டாம். இவ்வாறு இருந்தால் உங்களது பௌதீகமும் ஆன்மீகமாகி விடும். உலகத்தை சம்பாதிப்பது, வியாபாரம் செய்வது அல்லது வேலை பார்ப்பது ஆகிய அனைத்தும் நிய்யத் நல்லதாக இருந்தால் மார்க்கமாக மாறி விடுகின்றன. அல்லாஹ்வின் கட்டளைகளின் படி செயல்பட வேண்டும் என்ற உறுதிப்பாடு இருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதன் உலகத்திற்காக படைக்கப்படவில்லை. உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டும். எல்லா நேரமும் எப்படி இறைவன் மகிழ்ச்சியடைவான் என்ற தேட்டமும் ஏக்கமும் இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் உலகமும் அவருக்கு ஹலாலாகும். 'செயல்கள் யாவும் எண்ணங்களின் அடிப்படையிலேயே அமைகின்றன'.

ஒவ்வொரு அஹ்மதியிடமும் இந்த நிலை உருவாக வேண்டும். நாம் உலகத்தை விட மார்க்கத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்குவோம் என்று நாம் உடன்படிக்கை செய்கிறோம். அல்லாஹ்வின் விருப்பத்திற்கும் எதிர்பார்ப்பிற்கும் விரோதமான எந்தவொரு செயலையும் நாம் செய்து விடக் கூடாது. இதன்படி சிந்தனையை அமைத்துக் கொண்டு தம் வாழ்வைக் கழிப்பவர்கள் நம்மில் மிகவும் அதிர்ஷ்டசாலிகள் ஆவோம். இல்லை என்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்வது நமக்கு எந்தப் பயனையும் தராது. மேலும் நாம் பள்ளிவாசல் கட்டுவதும் நமக்கு எந்தப் பயனும் தராது.

இந்நாட்களில் மாநாடு நடைபெறுகிறது என்பதை நாம் அறிவோம். இந்த மாநாடுகளும் நமக்கு பயன் தராது. ஏனென்றால் இந்த மாநாடு உலகத் திருவிழா அல்ல என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். ஆகவே இந்த மாநாட்டில் வருவதற்கான நோக்கம் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதும் மார்க்க அறிவைப் பெறுவதும் ஆன்மீகப் பயனை அடைவதும் ஆகும். நான் கூறியது போன்று இந்த பள்ளிவாசலைக் கட்டியதுடன் உங்களில் முன்பை விட அதிகமாக தூய மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அத்துடன் தப்லீகிற்கும் புதிய வழிகள் திறக்கும்; இன்சா அல்லாஹ். உங்களுடைய செயல்பாடுகளைப் பார்த்து மக்களுக்கு உங்கள் பக்கம் கவனம் ஏற்படும். எனவே உங்களது செயல்களையும் அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப அமைத்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள்.

தப்லீக் தொடர்பாக நான் கிளை அமைப்புகளுக்கும் ஜமாஅத் அமைப்பிற்கும் கவனமூட்ட விரும்புகிறேன். இங்கு வழக்கமாக நீங்கள் செய்துவரும் தப்லீகை மட்டும் சார்ந்திருக்காதீர்கள். நாம் செய்து வருவதே நமக்கு போதும் என்று அமர்ந்து விடாதீர்கள். புதிய புதிய வழிகளைத் தேடுங்கள். இஸ்லாத்தை அதிகமாக அறிமுகப்படுத்துங்கள்.

மோரி மொழியில் திருக்குர்ஆன் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதிலும் ஜமாஅத்தை அறிமுகம் செய்துள்ளார்கள். உள்ளூர் மொழியில் தொலைக்காட்சியிலும், வானொலியிலும் இரண்டு நாட்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சியை நல்ல முறையில் கவரேஜ் செய்துள்ளார்கள். பள்ளிவாசல் திறக்கப்பட்ட பின் இன்னும் அதிகமாக அறிமுகம் ஏற்படும். இறைவன் வழங்கியுள்ள இந்த ஏற்பாடுகளை நாம் மார்க்கத்தைப் பரப்புவதற்காகப் பயன்படுத்தினால் இறைவனின் விருப்பத்தைப் பெறக்கூடியவர்களாவோம்.

எனவே இன்று இபாதத்துகளுக்குரிய உரிமையை நிறைவேற்ற முயற்சி செய்வோம் என்று உடன்படிக்கை செய்யும் அதே வேளையில் உயர்ந்த நல்லொழுக்கத்தின் மூலம் இறைவனின் கட்டளைகளின்படி செயல்பட்டவாறு அன்பு, நேசம் மற்றும் ஒத்துழைப்பையும் அதிகப்படுத்துங்கள். உள்ளூர் மக்களுக்கும் உண்மையான இஸ்லாத்தை அறிமுகப்படுத்துங்கள். இஸ்லாத்திற்கு எதிராக உருவாகியுள்ள தப்பெண்ணங்களை அகற்ற முயற்சி செய்யுங்கள். எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் எண்ணங்கள் உறுதியாகவும் மன தைரியம் இளமையாகவும் இருந்தால் மிகக் குறைவான எண்ணிக்கையைக் கொண்டவர்கள் கூட பலவற்றை செய்து முடிக்க முடியும். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை எல்லாருக்கும் வழங்குவானாக!

நீங்கள் கட்டிய இந்த அழகிய பள்ளிவாசலை உலகெங்கும் இருக்கும் அஹ்மதிகள் M.T.A.-வின் மூலமாக எல்லாரும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த பள்ளிவாசல் பற்றிய சில குறிப்புகளைக் கேட்பதற்கு அஹ்மதிகளிடம் அதிக ஆர்வம் உள்ளது. எனவே சுருக்கமாக பள்ளிவாசலின் புள்ளி விபரத்தை நான் எடுத்துக் கூறுகிறேன்.

இதற்கு எவ்வளவு செலவாகியுள்ளது என்று நான் முன்னதாகக் கூறிவிட்டேன். அதாவது 3.1 மில்லியன் டாலர். மஸ்ஜித் முக்கீத் என்பது இதன் பெயராகும். இது முன்பிருந்த ஹாலின் பெயராகும். இந்த இடம் நல்ல பகுதியில் அமைந்துள்ளது. இரயில் நிலையம் மற்றும் நகரத்தின் இரண்டு பெரிய சாலையின் அருகே அமைந்துள்ளது. இதன் மொத்தப் பரப்பளவு ஒன்றே முக்கால் ஏக்கர் ஆகும். இது 1999-ல் வாங்கப்பட்டது. 256 சதுர மீட்டர் பரப்பளவில் ஒரு

ஹால் இருந்தது. 2002-ல் லஜ்னாவுக்காக தனியாக ஒரு ஹால் கட்டப்பட்டது. 112 சதுர மீட்டர் பரப்பளவில் இந்த இரண்டு ஹால்களும் தொழுகை சென்டராக இதுவரை பயன்பட்டு வந்தது. ஹாலுக்கு மேலே மிசனரி வீடும் உள்ளது. 2006-ல் நான் இங்கு சுற்றுப் பயணம் செய்த போது பள்ளிவாசல் கட்டுமாறு கூறினேன். 2012 ஜுலையில் இதன் கட்டுமானம் தொடங்கி ஆகஸ்டு 2013 -ல் கட்டி முடிக்கப்பட்டது.

இது இரண்டு மாடி கொண்ட பள்ளிவாசலாகும். கீழ்த்தளம் லஜ்னாவுக்காக உள்ளது. இது 239 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டது. ஆடியோ வீடியோ அறை, கான்ஃபரஸ் அறை உள்ளது. உளூ செய்வதற்கும் வசதியுள்ளது. வெளியிலிருந்து இதன் மினாராவும் தென்படுகிறது. M.T.A.-வில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். இதன் உயரம் 18½ மீட்டர் ஆகும். குவிமாடம் 8 மீட்டர் அளவு கொண்டது.

இரண்டு ஹால்களிலும் தொழுகையாளிகளின் கொள்ளளவு கவுன்ஸிலின் பார்வையில் ஏறக்குறைய 600 ஆகும். ஆனால் 750 பேர் தொழுவதற்கான இடவசதி உள்ளது. பழைய கட்டடத்தில் 300 பேர் தொழ முடியும். இவ்வாறு எனது பார்வையில் ஏறக்குறைய ஆயிரம் பேர் தொழுவதற்கு இதில் இடமுள்ளது. 107 கார்கள் நிறுத்துவதற்கு பார்க்கிங் வசதி உள்ளது. இதோடு லங்கர்கானாவும் கட்டப்பட்டுள்ளது. இதற்கு 3½ இலட்சம் நியூசிலாந்து டாலர் செலவாகியுள்ளது.

ஜமாஅத்தின் வழக்கத்தின் படி நான் இதை கூறியுள்ளேன். ஜமாஅத் உறுப்பினர்கள் இதற்காக ஒருவருக்கொருவர் போட்டி போட்டு பொருள் தியாகம் செய்துள்ளனர். பெண்கள் தமது நகைகளைத் தந்துள்ளனர். குழந்தைகள் கை செலவுக்காக சேமித்து வைத்த தொகையைப் பள்ளிவாசல் கட்டுவதற்காக கொடுத்துள்ளனர்.

இவர்கள் கூறுகின்றனர். இரண்டு முறை இவ்வாறு நிகழ்ந்தது. அதாவது மாதக் கடைசியில் ஜமாஅத்தின் அக்கவுண்டில் பணமில்லை. ஆனால் கான்ட்ராக்டருக்குப் பணம் கொடுக்க வேண்டியது வந்தது. அப்போது தேசிய ஆமிலா, கிளை அமைப்புகள் மற்றும் பிற உறுப்பினர்கள் சிலர் உடனடியாக ஒரு இலட்சம் டாலர் அல்லது அதை விட அதிகமான தொகையை வசூல் செய்து செலுத்தியுள்ளனர்.

சிலர் அல்லாஹ்வின் அருளால் ஒரு இலட்சம் டாலரை விட அதிகமாக தியாகம் செய்துள்ளனர். இது தவிர ஒவ்வொருவரும் தத்தமது சக்திக்கேற்ப தியாகம் புரிந்துள்ளனர். அசாதாரணமான தியாகம் செய்யும் வாய்ப்பு கிடைத்துள்ளது. ஜமாஅத் மிகவும் சிறிய ஜமாஅத்தாகும். ஆனால் மிக அதிகமாக செலவாகியுள்ளது.

எவ்வாறிருப்பினும் தியாகம் செய்த அனைவருக்கும் பொருள் தியாகம் செய்ய முடியாதவர்கள் வகாரே அமல் மூலம் தியாகம் செய்துள்ளனர். நேரத்தை தியாகம் செய்துள்ளனர். இவர்கள் அனைவரின் உயிரிலும் செல்வங்களிலும் எல்லையில்லா பரக்கத்துகளை வழங்குவானாக! இவர்களது தூய்மை மற்றும் விசுவாசத்தில் இவர்களை உயரச் செய்வானாக! இவர்களின் சந்ததிகளையும் அஹ்மதிய்யத்தில் எப்போதும் சேர்த்து வைப்பானாக! ஈமானிலும் உறுதிப்பாட்டிலும் வளர்ச்சி அடைவார்களாக! இவர்கள் தொழுகைகளுக்குரிய உரிமையை செலுத்துபவர்களாக இருப்பார்களாக! தமது வீடுகளையும் இறை தியானத்தால் நிறைத்து வைப்பவர்களாக இருக்கட்டுமாக!

இறை படைப்பினங்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற உணர்வால் நிறைந்தவர்களாக இருக்க வேண்டும். இஸ்லாத்தின் தூதுச் செய்தியைப் பரப்புவதன் பக்கம் கவனம் செலுத்துபவர்களாக இருப்பார்களாக! நான் சொன்னது போன்று இந்நாட்களில் உங்களது மாநாடு நடைபெறுகிறது. எனவே இந்நாட்களில் குறிப்பாக துஆக்களின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் நம் அனைவரிடத்தும் தூய மாற்றங்களை ஏற்படுத்துவானாக! என்று துஆ செய்யுங்கள். முன்பை விட அதிகமாக நமக்கு அல்லாஹ்வின் அச்சம் ஏற்பட வேண்டும். இந்த தூய மாற்றங்களை நிரந்தரமாக நமது வாழ்க்கையில் தக்க வைப்பவர்களாக நம்மை ஆக்குவானாக! ஜல்ஸாவுக்கு வருபவர்களுக்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்துள்ள துஆக்களிலிருந்து பங்கு பெறுபவர்களாக நம்மை ஆக்குவானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL MUQEETH Mosque, New Zealand

on **01.11.2013**

Translated by : Maulavi S. ABDUL QADIR Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456